1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்; முன் வரிசைக்கு மட்டும்தான் அந்தச் சலுகை.

திரு. பெ.சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை. வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலே—மாவட்டம் பூராவுமே—டீசல் கிடைக்கவில்லை. மின்சாரம் கிடைக்கவில்லை. மின்சாரம் இல்லாமல் ஒரு வார காலமாக போராட்டத்தை விவசாயிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதைச் சீர் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பேரவைத் தலைவர் அவர்கள் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுகிறேன்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் நெய்வேலி நிறுவனத்தில போதுமான அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படவில்லை. அதேபோல் மேட்டூரில் இருந்து தஞ்சைக்கு விடப்படுகிற தண்ணீர் நிறுத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தால் மேட்டூரில் இருந்து நமக்கு இதுவரையிலும் கிடைத்த மின்சாரம் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அண்மையில் மின்சார வெட்டு அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. கேரளாவோடு நாம் பேச்சு வார்த்தை நடத்த இருக்கின்றோம். அதன் வாயிலாக ஓரளவிற்கு நிலைமை சீர் அடையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. டீசலைப் பொறுத்தவரையில், தற்போது என்னிடத்தில் தகவல் இல்லை. அது பற்றி அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

ஆ. 6-வது தமிழ்நாடு சட்டசபையைக் கலைப்பது என்கிற பேச்சு குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்னையை நாம் ஆராய்ந்து கொண்டு இருக்கிற நேரத்திலே நம்முடைய சட்டசபையைக் கலைப்பது என்கிற பேச்சு ஒவ்வொரு நாளும் அடிபட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த சூழ்நிலையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றார்கள். அங்கே பேசியிருக்கிறார்கள். அதற்கு முன்பாகவே காங்கிரஸ் அல்லாத மாநிலங்களைச் சேர்ந்த சட்டசபைகளைக் கலைப்பது சம்பந்தமாக கடிதம் எழுதப்பட்டு இருப்பதாக பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்வளவு முக்கியமான பிரச்னை இருப்பதால் நம்முடைய ஆயுட் காலத்தைப் பற்றி நமக்கே நிச்சயம் இல்லாமல் இருப்பதால், அதைப் பற்றி விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கொடுத்தால் மேலும் உற்சாகத்தோடு பணியாற்றுவதா அல்லது உட்கார்ந்து விடுவதா என்பதைப் பற்றி முடிவு செய்ய வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதைப் பற்றி மிக ஆவலாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நடப்பது நடக்கட்டும். அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்.

(இ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நாங்கள் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தோம். அதைத் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி இருக்கிறீர்கள். சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, நாமக் கல் கல்லூரி ஆகியவற்றில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கொடுத்த தீர்மானம் என்னவாயிற்று என்றுதான் கேட்க வேண்டுமே தவிர அதன் விவரங்களைச் சொல்லக் கூடாது. ஆகவே இந்தப் பிரச்சினை சனிக்கிழமை இங்கே எழுப்பப்படலாம். அநேகமாக வந்தாலும் வரலாம், அந்த நம்பிக்கையோடு அவர்கள் அமரலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்

அரசியலமைப்பு 45வது திருத்தச் சட்டம் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்பது குறித்து

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நம்முடைய பேரவைவிதி 13(2)-ன்படி 'அரசின்சட்டமுன்வடிவு அல்லது அரசின் பிற அலுவல்களை விவாதிக்க வேண்டுமென்று கொண்டு வரப் பெறும் தீர்மானத்திற்கிணங்க உரையின் மீதான விவாதம் தள்ளி வைக்கப்பெறலாம்'' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஆளுநர் உரை மீதான விவாதம் தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொடுத்து இருக்கிறேன் அதற்கு உங்க ளுடைய அனுமதி கோருவதற்கு முன்பு ஒரு பிரச்சினை இருக்கிறது. விவாதத்திற்கு ஒரு பிரச்சினை இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால், அது குறித்து தனி நபர் தீர்மானம் கொடுக்கத் தேவையில்லை. உங்களுக்குத் தெரியும், இப்போது "ரிசர்வேஷன் ஆப் சீட்ஸ் பார் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்டு ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்'' ஒரு சட்டம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியில் என்ன சொல்லப் பட்டு இருக்கிறது என்பதை மட்டும் சொல்லுங்கள். பொருளுக்குள் போக வேண்டாம். பொருள் குறித்த விவாதம் அவசியம் இல்லை.